திருக்கோவிலூர் நகரத்தில் நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு முகாமை கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ நேரில் சென்று பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சியர் பிரசாந்த், விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி, மாவட்ட துணை செயலாளர் டி.என்.முருகன், மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் மு.தங்கம், தலைமை செயற்குழு உறுப்பினர் செல்வராஜ், நகர செயலாளர் கோபிகிருஷ்ணன், நகர மன்ற துணை தலைவர் உமாமகேஸ்வரி குணா, மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

உத்தமர் காந்தியடிகள் அவர்களின் 157வது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை மாவட்டம், மேலமாசி வீதி காதிகிராப்ட் கதர் விற்பனை நிலையத்தில் உள்ள உத்தமர் காந்தியடிகள் அவர்களின் திருஉருவச் சிலைக்கு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, வரலாற்றுப் புகைப்படங்களை பார்வையிட்டு தீபாவளி கதர் சிறப்பு விற்பனையை துவக்கி வைத்தார். உடன் மாநில இளைஞரணி துணை செயலாளர் ஜி.பி.ராஜா, மாமன்ற உறுப்பினர் பெ.சசிக்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கதர் வாரிய பணியாளர்கள், பொதுமக்கள் பங்கேற்றனர்.

அத்தைக்கு மீசை முளைக்கட்டும் பார்த்துக் கொள்ளலாம்!

வேலூர் காட்பாடியில் அமைச்சர் துரைமுருகன் பேட்டி!

வேலூர்,அக். 6-

வேலூர் மாவட்டம் காட்பாடி பகுதி திருவள்ளுவர் நகர், ஜோதிநகர் பகுதியை சார்ந்த 45 பயனாளிகளுக்கு சிறப்பு வரன்முறை படுத்தும் திட்டத்தின்கீழ் ரூ.7.20 கோடி மதிப்பிலான வீட்டுமனை பட்டாக்கள் வழங்கும் விழா நடந்தது.

விழாவிற்கு மாவட்ட கலெக்டர் வே.இரா.சுப்புலெட்சுமி தலைமை தாங்கி பேசினார். வேலூர் மாவட்ட வருவாய் அலுவலர் மாலதி, மாநகராட்சி மேயர் சுஜாதா, துணைமேயர் எம்.சுனில்குமார் மண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பயனாளிகளுக்கு பட்டாக்களை கழக பொதுச் செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வழங்கி பேசியதாவது;

தமிழ்நாடு முதலமைச்சராகதளபதிமு.க.ஸ்டாலின் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி பகுதிகளில் 5 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சேபனையற்ற அரசு

புறம்போக்கு நிலங்களில் வசித்து வரும் பொதுமக்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கும் சிறப்பு வரன்முறை திட்டத்தை கொண்டு வந்து இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாக்களை வழங்கி வருகிறார்கள். 45 பயனாளிகளுக்கு அதன் அடிப்படையில் இப்போது வழங்கப்பட்டுள்ளது.

நீண்ட கால பிரச்சினை தற்போது தீர்க்கப்பட்டுள்ளது. இந்த காட்பாடி தொகுதியில் கடந்த 4 ஆண்டுகளில் பாலங்கள், மருத்துவமனைகள், கல்லூரிகள், சாலைகள் என பல்வேறு வளர்ச்சி பணிகள் செய்யப்பட்டுள்ளன. இந்த தொகுதி மேன்மை அடைய வேண்டும்என்பதற்காக இது போன்ற மேம்பாட்டு பணிகள் தொடர்ந்து செய்து வருகிறேன். காட்பாடி தொகுதியில் உள்ள பிற பகுதிகளை சார்ந்த பொது மக்களுக்கும் இந்த திட்டத்தின்கீழ் படிப்படியாக வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் காட்பாடி ஒன்றிய குழுத்தலைவர் வேல்முருகன், துணைத்தலைவர் எஸ்.சரவணன், மாநகராட்சி கமிஷனர் லட்சுமணன், வேலூர் உதவி கலெக்டர் செந்தில் குமார், காட்பாடி தாசில்தார் ஜெகதீஸ்வரன், முன்னாள் ஒன்றிய கழக செயலாளர் எஸ்.தணிகாசலம் மாமன்ற உறுப்பினர்கள் ஜி.சித்ராலோகநாதன்,ஜி.ரவிக்குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டிடாசரவணன்,மாநகர மாணவர் அணி அமைப்பாளர் ஆர்.சதீஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

பின்னர் அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவரிடம் நிருபர்கள் கேட்ட கேள்வியும், அதற்கு அவர் அளித்த பதிலும் விவரம் வருமாறு;

கேள்வி: கரூர் சம்பவம் தொடர்பாக முறையான விசாரணையை அதிகாரிகள் மேற்கொள்ளாவிட்டால் 2026ல் அ.தி.மு.க., ஆட்சிக்கு வந்த பிறகு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என எடப்பாடி பழனிச்சாமி பேசி இருப்பது குறித்து?.

பதில்: அத்தைக்கு மீசை முளைக்கட்டும் பார்த்துக் கொள்ளலாம்.

கேள்வி: தி.மு.க அரசை வீட்டிற்கு அனுப்பும் நேரம் நெருங்கி விட்டதாக ஜி.கே.வாசன் எம்.பி., கூறி உள்ளாரே?.

பதில்: சிங்கிள்ரூமுக்குள்ள கட்சியின் செயற்குழுவை நடத்துபவர் களுக்கு எல்லாம் பதில் சொல்ல முடியாது.

கேள்வி: உளவுத்துறை கருத்து கேட்டு நடவடிக்கை எடுப்பதாக வெளியான தகவல் குறித்து?.

பதில்: உங்களுக்கு டைட்டில் வேண்டும் என்பதற்காக ஆதாரமற்ற எதையும் என்னிடம் கேட்காதீர்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

முதுபெரும் எழுத்தாளர் கொ.மா.கோதண்டம் மறைவு:

இலக்கிய உலகிற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக்.6-

"முதுபெரும் எழுத்தாளர் கொ.மா. கோதண்டம் மறைவு இலக்கிய உலகிற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

முதுபெரும் எழுத்தாளர் குறிஞ்சிச்செல்வர் கொ.மா. கோதண்டம் அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

எளிய குடும்பத்தில் பிறந்து பஞ்சாலைத் தொழிலாளராக தமது வாழ்வைத் தொடங்கிய திரு. கோதண்டம் அவர்கள், அதே எளிய மக்களுக்கான எழுத்தின் மூலமாக இலக்கிய உலகில் தடம்பதித்த மிகச்சிறந்த படைப்பாளி. அதுமட்டுமின்றி சிறார்களுக்கான இலக்கியப் படைப்புகளிலும் பெரும் பங்களிப்பைச் செய்து, இன்றைய தலைமுறை எழுத்தாளர்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர்.

பால சாகித்திய விருது, குடியரசுத் தலைவர் விருது, தமிழ்நாடு அரசின் இலக்கிய மாமணி விருது எனப் பல்வேறு சிறப்புகளைப் பெற்ற இவரது நூல்கள், கடந்த 2025 ஏப்ரல் 5 அன்று நமது திராவிட மாடல் அரசால் நாட்டுடைமை ஆக்கப்பட்டன என்பதை யும் நினைவு கூர்கிறேன்.

இத்தனை சிறப்புகள் வாய்ந்த எழுத்தாளர் கொ.மா. கோதண்டம் அவர்களின் மறைவு கலை, இலக்கிய உலகிற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவரது மறைவால் வாடும் குடும்பத்தினர், உறவினர்கள், சக எழுத்தா ளர்கள் மற்றும் வாசகர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

கலைஞர் பல்கலைக் கழக மசோதா!

ஆளுநர் ஒப்புதல் அளிக்க உத்தரவிட வேண்டும்!

உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்கு!

சென்னை, அக்.6-

கலைஞர் பல்கலைக் கழக மசோதாவுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க உத்தரவிடக்கோரி, உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்கு தொடர்ந்துள்ளது.

கும்பகோணத்தில் கலைஞர் பெயரில் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான சட்ட மசோதா கடந்த ஏப்ரல் மாதம், தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது. கலைஞர் பெயரில் அமைக்கப்படும் பல்கலைக்கழகத்துக்கு வேந்தராக முதலமைச்சரை நியமிக்கவும் மசோதாவில் வழிவகை செய்யப்பட்டிருந்தது. துணைவேந்தர் நியமன மசோதா உள்ளிட்டவை தொடர்பான வழக்குகளில், 3 மாதங்களுக்குள் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பது குறித்து முடிவெடுக்க வேண்டும் என்று ஆளுநருக்கு உச்சநீதிமன்றம் கெடு விதித்திருந்தது. ஆனால் கலைஞர் பல்கலைக்கழக மசோதா நிறைவேற்றப்பட்டு 3 மாதங்களாகஒப்புதல்அளிக்காமல் இருந்த ஆளுநர் ஆர்.என். ரவி, கடந்த ஆகஸ்ட் மாதம் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தார். மசோதாவை குடியரசுத் தலைவருக்கு அனுப்பிய செயலுக்கு எதிராக எதிராக உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்கு தொடர்ந்துள்ளது.

மசோதாவை ஆளுநர் குடியரசு தலைவருக்கு அனுப்பிய செயல் சட்டவிரோதமானது என்றும், அரசியல் சாசனப் பிரிவு 163, 200க்கு எதிரானது என்றும் அறிவிக்குமாறு தமிழ்நாடு அரசு கோரியுள்ளது.

ஆளுநரின் முடிவை ரத்து செய்து, மசோதாவை ஆளுநருக்கே குடியரசுத் தலைவர் திருப்பி அனுப்ப உத்தரவிடவும் வலியுறுத்தியுள்ளது. அரசியல் சாசன பிரிவு 200ன் படி, மசோதாவுக்கு ஆளுநர் ஒப்புதல் வழங்க உத்தரவிட வேண்டும் என்று தமிழ்நாடு அரசு தாக்கல் செய்துள்ள மனுவில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

கரூர் கொடுந்துயரம்:

சிறப்பு புலனாய்வுக்குழு விசாரணையைத் தொடங்கியது!

கரூர், அக்.6-

கரூர் துயரச் சம்பவம் தொடர்பாக ஐஜி அஸ்ரா கார்க் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு புலனாய்வு குழுவினர் விசாரணையை தொடங்கி உள்ளனர்.

கரூரில் கடந்த மாதம் 27ம் தேதி நடிகர் விஜய் பிரசார கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். இந்த துயர சம்பவம் நாட்டையே உலுக்கியது. இதையடுத்து இந்த சம்பவம் தொடர்பாக விசாரித்து அறிக்கை அளிக்க ஓய்வுபெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் ஒரு நபர் ஆணையத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அமைத்துள்ளார். அதன்படி நீதிபதி அருணா ஜெகதீசன் கரூரில் 2 நாள் முகாமிட்டு விசாரணை நடத்தினார்.

இதனிடையே இந்த வழக்கின் விசாரணை அதிகாரியாக ஏடிஎஸ்பி பிரேமானந்த் நியமிக்கப்பட்டார். சம்பவம் தொடர்பாக கரூர் மாவட்ட தவெக நிர்வாகிகள் கைது செய்யப்பட்டனர். இந்நிலையில் கரூர் சம்பவம் தொடர்பான வழக்குகளை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், கரூர் சம்பவம் தொடர் பாக விசாரிக்க வடக்கு மண்டல ஐஜி அஸ்ரா கார்க் தலைமையில் சிறப்பு புலனாய்வு குழுவை அமைத்து உத்தரவிட்டது. இதனைத் தொடர்ந்து கரூர் விசாரணை அதிகாரியாக ஏற்கனவே நியமிக்கப்பட்டு இருந்த ஏடிஎஸ்பி பிரேமானந்த் விசாரணை ஆவணங்களை சிறப்பு விசாரணைக் குழுவிடம் ஒப்படைத்தார்.

இந்நிலையில், அஸ்ரா கார்க் தலைமையிலான குழுவினர் விசாரணையை தொடங்கி உள்ளனர்.

இந்த சிறப்பு புலனாய்வு குழுவில் நாமக்கல் மாவட்ட எஸ்.பி. விமலா, சிபிசிஐடி எஸ்பி சியாமளா தேவி ஆகிய 2 பெண் அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர். மேலும், 3 ஏடிஎஸ்பிக்கள், டிஎஸ்பிக்கள், ஆய்வாளர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்கள் இந்த குழுவில் உள்ளனர்.

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் – வனத்துறை சார்பில்

அழிந்து வரும் உயிரினங்களைப் பாதுகாக்க ரூ.1 கோடி செலவில் முன்னோடித் திட்டம்!

தமிழ்நாடு அரசு அரசாணை வெளியீடு!

சென்னை, அக்.6

தமிழ்நாடு அரசு அழிவின் விளிம்பில் உள்ள சிங்கவால் குரங்கு, சென்னைமுள்ளெலி, வரிக் கழுதைப்புலி மற்றும் கூம்புதலை மஹ்சீர் மீன் ஆகிய உயிரினங்களைப் பாதுகாப்பதற்காக 1.00 கோடி ரூபாய் செலவில் ஒரு முன்னோடித் திட்டத்தை தொடங்குகிறது.

மார்ச் 2025ல் சட்டமன்றத்தில் வனத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட இந்த திட்டம், தமிழ்நாட்டின் பல்லுயிர் பாதுகாப்பு உத்தியின் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தைக் குறிக்கிறது, பெரிய உயிரினமான யானைகள் மற்றும் புலிகள் போன்றே சுற்றுச்சூழல் சமநிலையை பராமரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் அழிவின் விளிம்பில் உள்ள உயிரினங்களை பாதுகாப்பதில் கவனம் செலுத்துகிறது.

இது தொடர்பாக சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை அரசாணை வெளியிட்டுள்ளது.

மேற்கு மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளைக் கொண்ட தமிழ்நாடு, உலகளவில் பல்லுயிர் பெருக்க மையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு முயற்சிகள் வரலாற்று ரீதியாக உயிரினங்களில் கவனம் செலுத்தியுள்ளன, ஆனால் விளிம்பின் நிலையில் அறியப்பட்ட உயிரினங்கள் வாழ்விட இழப்பு, வேட்டையாடுதல், சாலை இறப்பு, சுற்றுச்சூழல் புறக்கணிப்பு மற்றும் ஆக்கிரமிப்பு அழுத்தங்கள் காரணமாக தொடர்ந்து அழிவின் அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றன.

இந்த இனங்கள் ஒவ்வொன்றும், எப்போதும் பொதுமக்களின் பார்வையில் இல்லாவிட்டாலும், மகரந்தச் சேர்க்கை, விதை பரவல், நோய் கட்டுப்பாடு மற்றும் நீர் அமைப்பு மறுசீரமைப்பு போன்ற செயல்பாடுகள் மூலம் சுற்றுச்சூழல் அமைப்புகளின் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாத பங்களிப்பை வழங்குகின்றன.

இந்தத் திட்டம் சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த நான்கு இனங்களை இலக்காகக் கொண்டுள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலைகளில் காணப்படும் அழிந்து வரும் விலங்கினமான சிங்கவால் குரங்குகள் வரையறுக்கப்பட்டவனப்பகுதிகளில் வாழ்கிறது.

இரவு நேர மற்றும் மறைவு வாழ்க்கை முறை கொண்ட சென்னை முள்ளேலி, தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் மற்றும் கேரளாவின் வறண்ட நிலப்பரப்புகளில் காணப்படுகிறது, இருப்பினும் இது போதுமான அளவு ஆய்வு செய்யப்படாமலும் பாதுகாப்பின்றியும் உள்ளது.

கிட்டத்தட்ட அச்சுறுத்தலுக்கு உள்ளான இனமாகவும் இயற்கை தோட்டியாகவும் இருக்கும் வரிக் கழுதைப்புலி, நோய்களைக் கட்டுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது, ஆனால் முதுமலை புலிகள் காப்பக நிலப்பரப் பில் விரைவான சரிவை எதிர்கொள்கிறது. மோயார் ஆற்றில் ஒரு காலத்தில் ஏராளமாக இருந்த கூம்புதலை மக்காக், இப்போது அணை கட்டுமானம், அழிவு கரமான மீன்பிடி நடைமுறைகள், மாசுபாடு மற்றும் ஆக்கிரமிப்பு காரணமாக மிகவும் அழியும் நிலையில் உள்ளது.

சிங்க வால் குரங்கு பாதுகாப்புக்காக மொத்தம் ரூ. 48.50 லட்சம், மெட்ராஸ் முள்ளம்பன்றிக்கு ரூ.20.50 லட்சம், வரிகழுதைப்புலிக்குரூ.14 லட்சம், மற்றும் கூம்புத் தலை மஹ்சீருக்கு ரூ.17 லட்சம் என மொத்தம் ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதி வாழ்விட கண்காணிப்பு, நீண்ட கால மக்கள் தொகை ஆய்வுகள், பாதுகாப்பு இனப்பெருக்க மையங்களை அமைத்தல் மற்றும்

சிங்கவால் குரங்குகளை பாதுகாக்க சுற்றுச்சூழல் ஆய்வுகள். வன இணைப்பை உறுதி செய்வதற்கான பாலங்கள், பள்ளிகள் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு மற்றும் கல்வித் திட்டங்கள், பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் அறிவிப்பு பலகைகள் மற்றும் முன்னணி வன ஊழியர்களுக்கான பயிற்சி ஆகியவை அடங்கும். கூம்புத் தலை மஹ்சீருக்கு, ஆற்றங்கரை மீன்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அவற்றின் வசிப்பிடத்திலேயே வளர்ப்பு, இனப்பெருக்கம் மற்றும் விடுவிப்பு திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

இந்த முயற்சியின் விளைவுகள் தொலைநோக்குடையதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மக்கள்தொகை நிலை, அச்சுறுத்தல்கள் மற்றும் வாழ்விடத் தரம் குறித்த அடிப்படைத் தரவு முறையாக உருவாக்கப்படும், இது நீண்ட கால உத்திகளுக்கு அறிவியல் அடித்தளத்தை வழங்கும். பாதுகாப்பு நடவடிக்கைகள் மனிதவன விலங்கு மோதலைக் குறைக்கும், சுற்றுச்சூழல் மீள்தன்மையை மேம்படுத்தும், மேலும் முக்கிய முயற்சிகளில் பெரும்பாலும் அழிந்து வரும் உயிரினங்களைப் பாதுகாக்க மாநிலத்தின் தயார்நிலையை வலுப்படுத்தும். சமூகங்கள் தீவிரமாக ஈடுபடும், இந்த அழிந்து வரும் உயிரினங்கள் குறித்த விழிப்புணர்வு, உரிமை மற்றும் நேர்மறையான அணுகுமுறைகளை வளர்க்கும். வனத்துறை ஊழியர்களின் திறன் மேம்படுத்தப்படும், அதே நேரத்தில் மழைக்காடுகள், வறண்ட நிலங்கள் மற்றும் நதி அமைப்புகள் போன்ற முக்கியமான வாழ்விடங்களின் சுற்றுச்சூழல் ஆரோக்கியம் நீண்டகால முன்னேற்றத்தைக் காணும்.

தமிழ்நாட்டின் இந்த அறிவிப்பானது அழிவின் விளிம்பில் உள்ளவற்றை பாதுகாப்பதற்கான ஒரு மைல்கல் ஆகும். இதில் 2022-ஆம் ஆண்டில் பாக் விரிகுடாவில் இந்தியாவின் முதல் கடற்பசு பாதுகாப்பு காப்பகம் உருவாக்கப்பட்டது. 2022ல் கடலூர் தேவாங்கு சரணாலயம் மற்றும் 2023-இல் நீலகிரி வரையாடு திட்டம் தொடங்கப்பட்டது ஆகியவை அடங்கும்.

சுற்றுச்சூழல் ரீதியாக முக்கியமான உயிரினங்களைப் பாதுகாப்பதற்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம், தமிழ்நாடு மீண்டும் ஒருமுறை பல்லுயிர் பாதுகாப்பில் தனது தனித்தன்மையை நிரூபித்துள்ளது. இந்த முயற்சி குன்மிங்மாண்ட்ரீல் உலகளாவிய பல்லுயிர் கட்டமைப்பின் 30x30 இலக்குகளுடன் ஒத்துப்போகிறது, இது உலகளாவிய காலநிலை மற்றும் பல்லுயிர் இலக்குகளுக்கான தமிழ்நாட்டின் உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

புதுச்சேரி மாநிலம் – வில்லியனூர் பாண்டியன் நகரில்

ரூ.75 லட்சம் செலவில் புதிய சாலை அமைக்கும் பணி!

எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

புதுச்சேரி, அக்.5-

புதுச்சேரி மாநிலம், வில்லியனூர் சட்டமன்றத் தொகுதி, வில்லியனூர் கூடப்பாக்கம் மெயின் ரோடு தொடங்கி பாண்டியன் நகர் மெயின் ரோடு மற்றும் 10 குறுக்கு வீதிகளுக்கு சாலை அமைக்கக் கோரி அப்பகுதி மக்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்ததின் அடிப்படையில் ரூபாய் 75 லட்சம் ஒதுக்கீடு பெற்று பொதுப்பணித் துறை சாலைகள் மற்றும் கட்டிடங்கள் வடக்கு பிரிவு மூலம் மேற்கொள்ளப்படும் பணிக்கான பூமி பூஜை நிகழ்ச்சி இன்று காலை 10.30 மணிக்கு நடந்தது.

இந்த நிகழ்ச்சியில், தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா அவர்கள் கலந்து கொண்டு, புதிய தார் சாலை அமைக்கும் பணியை பூஜை செய்து தொடங்கி வைத்தார்.

இதில், பொதுப்பணித்துறை சாலைகள் மற்றும் கட்டிடங்கள் வடக்கு பிரிவு செயற்பொறியாளர் வைத்தியநாதன், உதவிப் பொறியாளர் சீனுவாசராம், இளநிலைப் பொறியாளர் குலோத்துங்கன் மற்றும் ஊர் முக்கியஸ்தர்கள் கிருஷ்ணமூர்த்தி, ராம்ரோப், சுப்புராயிலு, பிரவீன், பிரதீப், கார்த்தி, சரவணன், சிலம்பரசன், கஸ்தூரி, அமுதா, தீபா, அபிராமி, சிவா, சரண்யா, திமுக பொதுக்குழு உறுப்பினர்கள் ராமசாமி, செல்வநாதன், வர்த்தக அணி அமைப்பாளர் ரமணன், ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் செல்வநாதன், சிறுபான்மை பிரிவு அமைப்பாளர் ஹாலித், ஆதிதிராவிடர் அணி தலைவர் பழனிசாமி, தொமுச தலைவர் அங்காளன்,

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் பழங்குடியின தலைவர் ஏகாம்பரம், துணை அமைப்பாளர்கள் சரவணன், காசிநாதன், தேசிகன், காளி, தொகுதி துணைச் செயலாளர் அரிகிருஷ்ணன், செயற்குழு உறுப்பினர்கள் சுப்பிரமணி யன், ஏழுமலை, கிளைக் கழக நிர்வாகிகள் சபரி, ராஜி, ஜனா, திலகர், தக்ஷிணாமூர்த்தி, தேவநாதன், சேகர், கார்த்திகேயன், கலைமணி, பாலகுரு, கமால்பாஷா, ராமஜெயம், ராஜேந்திரன், முத்து, அருண், அஞ்சாபுலி, நடராஜன், ரகு, கோதண்டம், சூர்யா, அசார், கோபி, மூர்த்தி,சந்தோஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம் சட்டமன்ற தொகுதி, கோலியனூர் மத்திய ஒன்றியம், தோகைப்பாடி ஊராட்சியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமை துவக்கி வைத்து, சிறப்புரையாற்றினார். உடன் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், கப்பூர் KNB.ராஜா, TNJ.சம்பத், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் கபாலி, இரா.கேசவன், நன்னாடு முத்துசாமி, கவுன்சிலர் பட்டு ஆறுமுகம், கொண்டங்கி கிருஷ்ணமூர்த்தி, ஞானவேல், ஜெயா பன்னீர் செல்வம், பாஞ்சாலி பிரசன்னா, தனசேகரன், முருகன், நிர்வாகிகள் குமரேசன், அன்பழகன், சிவக்குமார், பூபாலன், குப்புராஜ், பிரபு, ஐயனார், பாக்கியலட்சுமி, பூபாலன், முரளி, குமார், திருமால் பதி, சசிகுமார், மோகேஷ், கதிரேசன் மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.